இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நள்ளிரவில், ‘இதோ மணமகன் வருகிறார். அவரை எதிர்கொள்ள வாருங்கள்’ என்ற உரத்த குரல் ஒலித்தது. மணமகளின் தோழியர் எல்லாரும் எழுந்து தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்தினர். அப்போது அறிவிலிகள் முன்மதியுடையோரைப் பார்த்து, ‘எங்கள் விளக்குகள் அணைந்து கொண்டிருக்கின்றன; உங்கள் எண்ணெயில் எங்களுக்கும் கொடுங்கள்’ என்றார்கள். முன்மதியுடையவர்கள் மறுமொழியாக, ‘உங்களுக்கும் எங்களுக்கும் எண்ணெய் போதுமான அளவு இராமல் போகலாம். எனவே, வணிகரிடம் போய் நீங்களே வாங்கிக் கொள்வதுதான் நல்லது’ என்றார்கள். (மத் 25:4-9)

# இயேசுவின் தியாக வழியில் பிறரை அன்புகூர்வோம்!

## திருத்தந்தை வலியுறுத்து

வத்திக்கான்: காசாவில் நிகழ்ந்து வரும் போர் என்பது ஒருவர்மீது ஒருவர் இன்னும் கரிசனையும் அக்கறையும் கொள்வதற்கான ஓர் அழைப்பு என்று கூறியுள்ளார் அங்குள்ள திருக்குடும்ப பங்குத்தளத்தில் பிறரன்பு பணியாற்றிவரும் இளைஞர் Suhail Abo Dawod.



வத்திக்கான் செய்திகளுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு கூறியுள்ள 18 வயது நிரம்பிய Suhail Abo Dawod என்ற இவ்விளைஞர், போர் மக்கள் ஒருவரையொருவர் அதிகமாக அன்புகூரவும், அவர்களின் அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ளவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது என்றும் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தப் போர் மனிதகுலம் அனைத்திற்கும், நமக்கும், அனைவருக்கும் ஒரு செய்தியாக அமைந்துள்ளது என்று தான் உறுதியாக நம்புவதாகக் கூறியுள்ள Dawod, சிறப்பாக, காசாவில் உள்ள நமது கிறிஸ்தவச் சமூகத்திற்குக் கடவுளிடமிருந்து ஒரு செய்தி இருப்பதாகத் தான் நினைப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இயேசு எவ்வாறு மற்றவர்களுக்கு உதவினார், எவ்வாறு பணியாற்றினார் என்பதை போலவே, நாமும் ஒரு குடும்பமாக ஒருவரையொருவர் அன்புகூரவும், ஒருவருக்குக்கொருவர் உதவி செய்யவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்று உரைத்துள்ள Dawod, இயேசு நமக்காகத் தம்மையே தியாகம் செய்ததைப் போல நாமும் பிறருடைய நலன்களுக்காக நம்மையே தியாகம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.
நாம் வித்தியாசமானதொரு வாழ்க்கை முறையை வாழக் கற்றுக்கொள்வோம் என்றும், இயேசு தனது பெரிய மற்றும் அழகான ஆன்மாவால் பல நோய்களிலிருந்து மக்களைக் குணப்படுத்தியது போல், நாமும் ஒரு பெரிய மற்றும் தனித்துவமான இதயத்துடன் ஒருவருக்கொருவர் உதவுவோம் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார் Dawod.

அக்டோபர் 25, கடந்த புதன்கிழமையன்று, இஸ்ரயேல் இராணுவம் நிகழ்த்திய குண்டு வீச்சில் தனது வீட்டை இழந்துள்ள Dawod. இயேசுவை தனது உண்மையான இல்லமாகக் கருதுவதாகவும், மதியற்ற இந்த உலகில் இயேசுவே தனது அமைதி மற்றும் அன்பின் இல்லம் என்றும் கூறித் தனது இறைநம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்
அக்டோபர் 7, சனிக்கிழமையன்று, இஸ்ரேல் -ஹமாஸ் போர் ஏற்பட்டதைத் தொடர்ந்து



700-க்கும் மேற்பட்டோர் வடக்கு காசாவில் உள்ள திருக்குடும்ப ஆலய பங்குத்தளத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்கள் ஒரு கிறிஸ்தவச் சமூகமாக ஒன்றிணைந்துள்ளதுடன், திருப்பலி, செபமாலை செபித்தல் ஆகிய பக்தி முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக இறைவேண்டல் செய்து வருகின்றனர்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம்* - வத்திக்கான்

# ரவாங் புனித யூதா ததேயு பங்குத் திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது

ரவாங் : இங்குள்ள புனித யூதா ததேயு பங்கின், பங்குத் திருவிழாவான புனித யூதா ததேயு ஆண்டுத் திருவிழா கடந்த அக்டோபர் மாதம் 19-ஆம் திகதி கொடியேற்றத்துடன் 29-ஆம் திகதி வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புனித யூதா ததேயு இப்பங்கின் பாதுகாவலர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 19-ஆம் திகதி திருப்பலி கொண்டாடிய அருள்தந்தை போனவெஞ்சர் இராயப்பன் அவர்கள், பங்கு மக்களின் நம்பிக்கை வளர்ச்சியைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொள்வதாகத் தெரிவித்தார். ‘நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள், நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்’ எனும் கருப்பொருளில் இன்றைய சமூகத்தில் திருஅவையின் ஆற்றல் மிகு பங்களிப்பை மையமாகக் கொண்டு கொண்டாட்டம் தொடங்கப்பட்டது.

அடுத்த நாள் 20 அக்டோபர் அன்று, நல்லாயன் பங்கின் பங்குத்தந்தை அருள்பணி மிச்சேல் அந்தோணி அவர்கள் திருப்பலியோடு நிகழ்த்திய நற்கருணை ஆராதனை பங்கு மக்களையும் திருயாத்திரை இறைமக்களையும் ஆண்டவரோடு சிறப்பாக ஒன்றிக்கச் செய்தது.

அக்டோபர் 22-ஆம் திகதி காலை திருப்பலிக்கான தயாரிப்புப் பணியை கோலாலம்பூர் ‘The Eagle Wings’ எனும் சிறப்பு குழுவினர் பொறுப்பேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க்து. இவர்கள் உடல் ரீதியில் ஊனமுற்றோர்களாக இருந்த போதிலும் இப்பணியை சிறப்புற நிறைவேற்றியது ஒரு சவால் என்றே கூற வேண்டும்.







திருப்பலி கொண்டாடும் அருள்பணி விண்செென்ட் தோமஸ்

*தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்*

# மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவை 2023 ‘இணைந்து பயணிப்போம்’

**பிளந்தோங்:** மேற்கண்ட பேரவை கடந்த அக்டோபர் 14-ஆம் திகதி, இங்குள்ள மஜோடி மையத்தில் நடைபெற்றது. இப்பேரவையில் அருள்பணியாளர்களும் இருபால் துறவறத்தாரும், பங்குகளில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கும் பொதுநிலையினரும் கலந்துகொண்டனர்.

இந்த பேரவை அன்றைய தினத்தோடு முடிந்துவிட்ட பேரவையல்ல. மாறாக 2026-ல் நடைபெறவுள்ள மலேசிய மேய்ப்புப்பணி பேரவைக்கு கொண்டு செல்லப்படவுள்ள முக்கியப் பகிர்வுகளைப்பற்றி கூட்டாக முடிவெடுக்க வேண்டிய பேரவையாக அமைந்தது.

குடும்பம், திருஅவை, சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் ஆகிய பகுதிகளில் கவனம் செலுத்தி இவற்றுள் வளர்ச்சி கொண்டுவர 'உறவு, பங்கேற்பு மற்றும் பணி’ ஆகிய துறைகளில் வேற்றுமை மறந்து ஆவியில் ஒன்றாக இணைந்து பயணிப்பது பற்றிய சிந்தனையில் பயணிக்க வழிவகைகளைக் கண்டறிவது மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவை 2023-ன் தலையாய நோக்கமாகும்.

ஆயர் பெர்னர்ட் பவுல் அவர்கள் தமது தலைமையுரையில், ‘ஒன்றாக கூடிவர, ஒன்றாக சேவை செய்ய மற்றும் ஒன்றாக சாட்சி பகர’ எனும் அறைகூவலோடு அழைப்புவிடுத்தார். நாம் ஒருவருக்கொருவர் எவ்வாறு தேவைப்படுகிறோம் என்பதையும், தூய ஆவியாரால் வழிநடத்தப்படுவதற்கு நாம் எவ்வாறு அனுமதிக்க வேண்டும் என்பதையும் ஆயர்



வலியுறுத்தி பேசினார். அன்றைய தினம் ஆயரின் உரையை மலேசிய மொழியிலும், தமிழிலும், சீனத்திலும் அருள்சகோதரி சாந்தி மரியதாஸ், அருள்பணி சிரில் மண்ணாயகம், பேரருட்தந்தை பீட்டர் இங் ஆகியோர் மொழிபெயர்ப்பு செய்தனர்.

மறைவட்ட வாரியாக நடைபெற்ற மேய்ப்புப்பணி பேரவைகளில் அடையாளம் காணப்பட்ட விடயங்கள் சுருக்கமான விளக்கத்துடன் பேரவை ஆய்வுகள் தொடங்கியது. பங்கேற்பாளர்கள் தியானிக்கவும் முன்வைக்கப்பட்ட கண்டுபிடிப்புகளைப் பற்றி சிந்திக்கவும் பத்து நிமிட மௌன தியானத்திற்கு நேரம் ஒதுக்கப்பட்டது. பின்னர் பங்கேற்பாளர்கள் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும், கருத்துக்களைப் பகிரவும், கேள்விகள் கேட்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது.

தொடர்ந்து பங்கேற்பாளர்களில் சிலர் ஆய்வு செய்யப்பட்டுத் தொகுக்கப்பட்ட கருத்துக் குவியல்களையொட்டி கருத்துரைத் தனர். முதலாவதாக, ஜொகூர் பாரு, திருஇருதய ஆண்டவர் பங்கின் துணை பங்குத்தந்தை பவுல் சுவா அவர்கள், பங்கேற்பாளர்களின் அனைத்து கருத்துகளும் பகிர்வுகளும் கவனத்தில் கொள் ளப்பட்டதாகவும், இன்றைய குடும்பங்கள் பாரம்பரிய பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு வருவதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டதாகவும் கூறினார்.

தொடர்ந்து, பிளந்தோங், புனித யோசேப்பு பங்கின் திருத்தொண்டர் டாக்டர். லெஸ்லி பெட்ருஸ், திருமணத் தயாரிப்புப் பற்றியும், குடும்ப வாழ்க்கைக்கு வலுவான அடித்தளம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தி பேசினார். அடுத்து நிகழ்ந்த பொது கலந்துரையாடலில் திருவழிபாட்டில் மலாய் மொழி பயன்பாடு அதிகமாக இருக்க வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டது.

நிறைவாக, நமது எல்லாச் செயல்களிலும் கிறிஸ்துவை மையமாக வைத்து, பணிகளை மேலோட்டமாக மட்டும் கவனத்தில் கொள்ளாமல் திடமாகச் செயல்பட வேண்டும் என்றும் கருத்துரைத்தீர் என்றார்.

*தமிழாக்கம் : ஆர்.கே.*

## ரவாங், புனித யூதா ததேயு ஆண்டுத் திருவிழா கொண்டாட்டம்

*முதல் பக்கத் தொடர்ச்சி*

அக்டோபர் 27, வெள்ளிக்கிழமை காலை திருப்பலியின் போது, பல பங்கு மக்கள் மற்றும் திருப்பயணிகள், குறிப்பாக முதியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு நோயிற்பூசுதல் அருளடையாளம் வழங்கப்பட்டது. நவநாளின் 9-வது நாளான சனிக்கிழமையன்று, பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் திருப்பலிக்குத் தலைமையேற்றார். தனது நிறைவு உரையில், மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள், உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்’ எனும் கருப் பொருளில் இன்றைய சமூகத்தில் திருஅவையின் ஆற்றல் மிகு பங்களிப்பை மையமாகக் கொண்டு செயல்பட இறைமக்களுக்கு அவர்களின் அழைப்பை நினைவுபடுத்தி நன்றி கூறினார். திருப்பலியின் போது, நம்பிக்கையை வளர்ப்பதிலும் நம்பிக்கையாளர்களின் வழியை ஒளிரச் செய்வதிலும் அருள்பணி விண்செென்ட் தோமஸ் அவர்களின் அரும்பணிக்காக அவரைப் பாராட்டினார்.

பின்னர் புதிய ஆலயத்தின் கட்டுமானப் பணி வளர்ச்சி குறித்து, அருள்பணி விண்செென்ட் அவர்கள் சிறு விளக்கம் அளித்தார். இந்த திட்டத்திற்கு RM25 மில்லியன் செலவாகும் என்றும், பல ஆண்டுகளாக, பங்கில் RM8 மில்லியன் வசூலிக்கப்பட்டதாகவும், இன்னும் RM17 மில்லியன் குறைவாகவே உள்ளது என்றும் அவர் கூறினார். புனித யூதா ததேயுவின் ஆதரவுடனும் பரிந்துரையுடனும் இந்தத் திட்டம் தொடரும் வகையில், உத்தேசித்துள்ள தொகையை அடைய அனைவரும் தாராளமாக நன்கொடை அளிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.
மறுநாள் அருள்பணி பீட்டர் அந்தோணி அவர்களின் தலைமையில் தமிழ் திருப்பலி கொண்டாடப்பட்டது. ஆங்கில திருப்பலியானது அருள்பணி கிறிஸ்டோபர் சூசைப்பிள்ளை அவர்களாலும், சீன மொழியில் அருள்பணி பிலிப் சுவா அவர்களாலும் கொண்டாடப்பட்டன. நிறைவாக அருள்பணி வாலண்டைன் கோம்போக், புலம்பெயர்ந்தோர் மற்றும் மலாய் மொழி பேசும் சில பங்கு மக்களுக்கென மலேசிய மொழியில் திருப்பலி கொண்டாடினார்.

பங்குத்தந்தை விண்செென்ட் தோமஸ் அவர்கள், மாலையில் நடந்த நன்றி திருப்பலியின்போது, பல்வேறு இடங்களில் இருந்து திரளாக வருகைத் தந்த திருப்பணிகள், இறைமக்கள், உதவிகரம் நீட்டிய தன்னார்வலர்கள் அனைவருக்கும் தனது மகத்தான பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்.

*செய்தி தமிழாக்கம் : ஆர்.கே.*

# வரவிருக்கும் ஆண்டவரை வரவேற்க விழித்திருப்போம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 32-ம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். விவிலியத்தில் பல இடங்களில் காணப்படும் ஒரு சொல் ஞானம், இது எதைக் குறிக்கிறது? கடவுள் நமக்குத் தந்துள்ள அறிவு, தெளிவு, புத்திக்கூர்மை ஆகிய பண்புகளைக் கொண்டது ஞானம். கடவுள் நமக்குத் தந்துள்ள இறைவார்த்தையில் இப்பண்புகள் உள்ளதால், இறைவார்த்தையே ஞானம் என்றும் நாம் குறிப்பிடலாம். வார்த்தை மனுவுரு எடுத்த இயேசு, ஞானத்தில் முழுவெளிப்பாடு என்றும் நாம் கூறலாம். இறையாட்சி என்பது யாருக்கும் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதில்லை, தகுதியற்றோருக்குத் தரப்படுவதில்லை. அப்படியெனில் இறைவன் தரக்கூடிய மாட்சிமை நாடித் தேடுவோர்க்கு அளிக்கப் படுகிறது. விழிப்புடன் காத்திருந்து அதை அடைய விருப்பத்துடன் உழைப்போருக்கு வழங்கப்படுகிறது.

இன்றைய முதல் வாசகத்தில் ஞானத்தைப் பெண்ணாக உருவகப்படுத்துகிறார் ஞான நூலின் ஆசிரியர். இயேசு கிறிஸ்து பிறப்புக்கு 100 ஆண்டுகளுக்கு முன் பல இடங்களில் பரவியிருந்த யூதமக்களுக்குக் கிரேக்க மொழியில் எழுதுகிறார். எகிப்தில் பல தத்துவ கருத்துகள் உதித்தன. அந்தக் கருத்துகளில் தங்களை இழந்துவிடாமல் உண்மையான உள்ளத்தோடு தேடுவோர்க்கு இறைவன் விவேகம் நிறைந்த ஞானத்தைத் தருவார் என்று எழுதுகிறார்.

நற்செய்தியில் “விழிப்பாயிருங்கள் ஏனெனில் அவர் வரும் நாளோ, வேளையோ உங்களுக்குத் தெரியாது” என்று இயேசு நம்மை எச்சரித்து அதற்கான ஓர் உவமையையும் கூறுகிறார். இந்த உவமையில் மணமகள், மணமகன் முக்கியமல்ல, தோழியரே முக்கிய கதை மாந்தர்களாய் உள்ளார்கள். யூத திருமணங்களில் முக்கியமான நிகழ்ச்சி மணமகன் வந்து மணப்பெண்ணை அழைத்துச் செல்வது வழக்கம். இச்சடங்கிற்கு மணப்பெண்ணின் தோழியர் எண்ணெய் விளக்குடன் சந்திப்பது மரபு. தோழிகள் எண்ணையோடு கூடிய விளக்குடன் காத்திருப்பார்கள். மணமகன் வர காலதாமதமாகிறது.

இரவுநேரம் என்பதால் தோழியர் தூங்கிவிடுகிறார்கள். இதோ மணமகன் வருகிறார் என்ற குரலைக் கேட்டவுடன் விளக்குடன் எண்ணையும் தயார் நிலையில் வைத்திருந்த ஐந்து பேர் மணமகனை வரவேற்று அவரோடு மண்டபத்திற்குள் புகுந்தார்கள். மற்ற ஐந்து தோழியர் தயார் நிலையில் இல்லாததால் மண்டபத்திற்குள் நுழைய முடியாமல் கதவு மூடப்படுகிறது. விழிப்பாயிருந்த ஐந்து கன்னியர்கள் கடவுளின் ஞானமாக விளங்கும் கிறிஸ்துவைக் கண்டு கொண்டனர்.

இன்றைய பத்து தோழியர் உவமையை இரண்டு வகையில் புரிந்து கொள்ளலாம். ***முதலாவது*** நற்செய்தியின் ஒளியில் பார்க்கின்றபோது ஆண்டவரின் இரண்டாம் வருகையைப் பற்றிச் சொல்லி, அவர் எப்போது வருவார் என்று தெரியாததால் எதற்கும் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. ***இரண்டாவது*** வாழ்க்கை நிலையில் நாம் சிந்திக்கின்றபோது, அதே இயேசு இன்னும் பல மனிதர்கள் நிகழ்வுகள், அனுபவங்கள், அடையாளங்கள் வழியாக சந்தித்துக் கொண்டே இருக்கின்றார். நாம்தான் நம்முடைய ஆணவத்தாலும் அறியாமையினாலும், விழிகள் திறக்காமல் இருளில் உறங்கிக்கொண்டேயிருக்கின்றோம்.

ஆண்டவரைச் சந்திக்க அவருடைய உடனிருப்பை எல்லாவற்றிலும் உணர, ஒளியின் மக்களாக வாழ, விழிப்பாக இருக்க இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கிறது.

ஞானம் என்ற முத்தான மூன்றெழுத்தால் நம் வாழ்க்கை எனும் விளக்கை ஆண்டவருக்காக எரியச் செய்திட இறைவனிம் வேண்டுவோம்.

*சவரிநாதன்- சுங்கை பட்டாணி, கெடா*

**ஆண்டின் பொதுக்காலம் 32 ம்-ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | சால.ஞானம் 6: 12 –16 |
| தி.பா | 63: 1. 2-3. 4-5. 6-7 |
| 2-ம் வாசகம் | 1 தெசலோனி 4 :13 -18 |
| நற்செய்தி | மத் 25: 1 -13 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**